252

1 SEP 1907
NORTH ARCOT

# மன்பதையாற்றுப்படை.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 SEP 1907
MADRAS

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

[Victoria Press.] 1907. [*All rights reserved.*]

252
3-07

ஸ்ரீ

# மன்பதையாற்றுப்படை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 SEP 1907
M. S.

வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

இயற்றியது.

வேலூர் :

விக்டோரியா அச்சுக்கூடம்.

ப்லவங்க௵.

ஶ்ரீ

# மன்யதைையாற்றுப்படை.

ஸ்ரீ

# மன்பதையாற்றுப்படை.

---

## முகவுரை.

தெள்ளிய தமிழ்க்கடல் திளைக்குஞ் சீரியீர்!

என்னுடைய நண்பரிற்சிலர் வேண்டியதனால் மன்பதையாற்றுப்படையென்னும் இந்நூல், பள்ளி கொண்டையெனப்படும் உத்தர ஸ்ரீரங்க ஸ்தலத்து எம்பெருமானது சிறப்பு விளங்க என்னால் இயற்றப்பட்டது. "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" * என்பது இலக்கணமாதலால், ஆங்காங்கு ஆன்றோருடைய கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் இந்நூலிற் சிற்சிலவிடத்து எடுத்து ஆளப்பட்டுள்ளன. சிற்றறிவுடைய சிறியேன் இயற்றிய இதன்கணுள்ள குற்றங் குறைகளை அன்புடன் எனக்குத் தெரிவிப்பின் நன்றியறிவுடன் அடுத்தபதிப்பில் திருத்தி வெளியிடச் சித்தனாயிருக்கின்றேன்.

ப்லவங்க ௵,
ஆடி ௴.

பு. க. ஸ்ரீ.

---

* நன்னூல்-பொதுப்பாயிரம்-௧.

ஸ்ரீ

# மன்பதையாற்றுப்படை.

ஆற்றுப்படையென்பது-தமிழ்க்கலுள்ள தொண்ணூற்றறுவகைப்பிரபந்தங்களுள் ஓர் பிரபந்தம். ஆற்றுப்படை யென்பதற்கு-வழிப்படுத்தலென்பது பொருள். இங்கு, சிறந்தபயன் பெற்றானொருவன் அதனைப் பெறாதார்க்குப் பெறுமாறுகூறி அவர்களை வழிப்படுத்துதலாம். மன்பதை - மக்கட்பரப்பு வடவரங்கத் திருமாலை வணங்கியுய்ந்தானொருவன், அங்ஙனம் வணங்கியுய்வுபெறாத மக்கட்பரப்பை, அத்திருமாலிடத்தே ஆற்றுப்படுத்ததாக இயற்றப்பட்டது இந்நூலென்க. தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியலில் "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதன் வழித்தாய் இந்நூல் அமைந்தது. வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததாக இயற்றப்பட்ட திருமுருகாற்றுப்படை முதலியன காண்க.

ஸ்ரீ

## அவையடக்கம்.

உத்தராசிரங்கத்தி லொன்றும் பரமன்சீ
ரித்தகைய தென்றியா னியம்புறுதல்—கைத்துணையுங்
கண்ணிணையு மெய்வலியுங் காலிரண்டு மில்குறளன்
விண்ணனவிரு மெய்ப்பற்ற வீழ்வு.

---

ஸ்ரீ

# மண்பதையாற்றுப்படை.

## காப்பு.

[நம்மாழ்வார் துதி.]

சீர்த்த மறைப்பொருளைச் செந்தமிழாச் செய்தளித்த
தீர்த்தன் றிருவடியே சேர்வு.

---

## நூல்.

### நேரிசையாசிரியப்பா.

திருமா லுந்திச் செழுமலர் தரூஉ
மிருமா நிலத்தி விருவினை யாப்புண்
டல்லற் பிறப்பு மருந்துய ரிறப்பும்
பல்ல வுற்றுப் பதைத்தவொ ராளும்
பெண்ணு மயங்கப் பீழைக் கருப்பையா
மெண்ணா னருவருப் பியைந்த கொள்கலந்
தொல்லை வினையின் றொடர்பாற் றோன்றிச்
சொல்ல வியலாத் துர்க்கந் தந்தரும்
பழமலம் பலவகை பரித்த பாண்டத்
தழலும் புழுவை யொத்துப் புரண்டும்
வீழ்ந்தாம் பதைத்து விழும முற்று
மாழ்ந்து மெழுந்து மிரும்பசி யுழந்து
மீரைந் திங்க ளிடுக்கண பலவுற்
றருந் தாய்தா னாற்ற வயிற்றினைக்
கலக்கி மேதினி காணுறாஉம் பிறரு
மலக்கண் கொள்ள வதோமுக மாக
முடைகொள் வாயிலின் முறையீட் டிடன்யா
ரடைக்கலு மாகி யறையுஞ் சடக்கால்
பற்றப் பேதைமைப் பட்டுப் பரியு
முற்ற பிணியு முடற்றக் கலங்கிப்

பெற்றோர் சுற்றம் பெரிது மறுக்கும்
பெற்றோர் மனத்துட் பேதுறப் புரிந்துந்
தாயுந் தந்தையுந் தமருட னளவிலா
தேயுங் களிப்பா மிருங்கடன் மூழ்கப்
புன்னகை பெருநகை புதுமையின் விளைத்தும்
மன்னிய தளர்நடை மகிழுறப் புரிந்து
மருமலர்த் தென்னு மழகிய மழலை
பருவ மொழிகள் பலவா நவின்று
முறையிற் றிரிந்து மொன்றிய வுவகையின்
கோதுறு மாடல் குறைவறப் பயின்று
மேதில ரிகழ விடுக்கண் டந்துந்
தீதியல் காளை திருந்திய பின்றைக்
கண்டு மகளிரைக் காதலித் தவர்மொழி
கண்டு மெய்ம்மீன் காணுஞ் சாயன்
மயிலெனக் கழறிய மயக்குங் கண்களை
யயிலென வரைந்து மாதையை மூட்டு
முகத்தினை மாசிலா முழுமதி யென்றுஞ்
சகத்திற் பெறலருந் தாளம் பல்லித
ழிலவே புன்னகைக் கிலதே யுவமை
நலமார் கொங்கை காடிற் றுமரை
முகையெனப் புகன்று முறிந்திடு மிடைக்குத்
தகைசே ருவமந் தடித்தென மொழிந்துந்
தோளினை வேயெனத் தொடியணி தடக்கை
கேளிருந் தடத்து மிகிர்தாப் பூத்த
கஞ்ச மென்னக் கதித்துஞ் சீர்நடை
யஞ்சத் தின்னடை யணிசேர் சீறடி
பங்கய மென்னப் பன்னியுங் குழலைப்
பொங்கிய விருளெனப் புரித் துரைத்தும்
மெய்யினைத் தழுவ விழைந்து கவன்றன
மொய்ம்மென வோடி யுழன்றுங் கைப்பொருள்

வீணுக் கிறைத்து வெறுமையை யுற்றும்
நாணுக் கிடமா நவைக்கண் ணின்பத்
தோடிய நெஞ்சோ டிடல மிளைத்துங்
கேடியல் கலவி திளைக்கக் காலம்
வறிதே போக்கு மண்பதைத் திரள்காள்
* "வெறியயர் வெங்கள வேன்மகன் பாணி
முறியார் கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குள்ள மகிழ்தா வுண்ணுந்
தகையதா மன்றைத் தகவின் மகிழ்ச்சி"
பகையெனக் கருதாப் பாழ்த்த வறிவினி
ருறுதிக் கட்டுரை யுரைப்பக் கேண்மின்
பெறுதற் கரிதுநீர் பெற்றவிவ் யாக்கை
நல்வினைப் பயனு னானிலத் தெடுத்தனி
ரல்வினை புரியா ததனாற் பெறத்தகு
மரும்பயன் வல்லே யடைதற் பாற்றே
பெரும்பயன் விளக்குமிப் பீடுறு மாக்கை
யிழந்தபின் பிறவி யெதுவோ வறிகிலங்
கழன்ற காலங் கவர்தற் கொண்ணு
தினியுங் கால மிழுக்குடன் கழிக்கலி
ரினிவரும் பருவ மித்தகைத் தென்றே
யியம்பக் கேண்மி னேழைமை மக்கா
டயங்குறில் வுடலந் தளரு மலமா
நண்ணுறும் பிணிபல நடுங்குந் தேகங்
கண்ணு மிருளுங் காதுங் கேளா
வுள்ளஞ் சோரு முறையுங் குழறுங்

---

* "வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்றோ மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்."—நாலடியார்-
இளமை நிலையாமை- ௪.

தெள்ளிய வறிவு திகைத்திடு மிருளும்
வெறுக்கக் கோழை வீழ்ந்திடும் பீளை
பிறக்குங் குஞ்சி பெரிதும் வெறுக்கு
மருமருந் தன்ன வடிசிலும் வெறுப்பி
னொருவரு மணுக வொண்ணா நாற்ற
முடலெலாம் வீச மொல்கித் தண்ட
மடலற வூன்றலி ரன்றியு மெடுக்கவும்
பிடிக்கவு மலத்தைப் பிறர்வெறுத் தெடுக்கவு
மிடத்துப் பலவா யிகழவு மிருப்பிர்
நமன்றமர் பற்ற நடுக்கங் கொள்விர்
தமர்கிரண் டன்ன தகவி றீவினை
யிழைத்ததற் கெண்ணி யிருநிர யத்து
ணுழைக்கப் பட்டுநீர் றுவலருந் துன்பம்
பெறுவி ரிங்ஙனே பீடறு வினையான்
மறுகுவ தென்னே மயங்குவ தென்னே
* "படுமழை மொக்குளிற் பன்முறை தோன்
கெடுவதாம் யாக்கை" யெனப்பின் கூ[illegible]வக் [றிக்
கண்டுறைட் டம்மிலன் காலங் குறு
னெண்ணைப் பொழுது மிமைப்பி லுயிரைப்
பிரிப்ப னவிர்தரும் பெரிய † கரும்பினை

---

* "படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் — தடு
[மாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்." — நாலடியார்-யாக்கைநிலையாமை-௭.

† கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்." — நாலடியார்-அறன்வலியுறுத்தல்-௫.

ரெரித்துச் சாற்றை நிறைய வடைந்தபின்
கோதுதா னெரிதல் குறித்துக் கலங்குந
சோதுதற் குண்டோ வொப்பா வுடலாற்
பெறப்படும் பயனைப் பெற்றபி னிவி
சிறந்தாற் கலங்குதற் கென்றே கேழையி
ருய்வதற் குபாய முரைப்பல் வம்மின்
றெய்ய வருளருத் தெய்வமா யவன்றா
ளியல்பா யெழுந்த விருங்கரு ணையினான்
மயலுறு மாவிட வர்க்கமுய் தற்காக்
கோயில் கொண்ட குவலயத் தலங்களுண்
மாயிரு வேங்கட மலைவட வரம்பாத்
தெற்குத் தீதறு குமரி வரம்பா
நற்கடல் குடக்கு நலிலுங் குணக்கும்
வரம்பா மன்னி வயங்குந் தமிழ்நிலத்
தாரஞ்சேர் சான்றோ ருடையநற் றொண்டை
வளநா டுற்ற வான்பதி யொன்றை
யுளமா டுற்ற வம்பர் தம்பதி
சீர்த்தன் றென்ப சிறக்கும் பாவிகர்
தீர்த்த மிடையறாத் திருத்திய பாலா
றாங்கொளத் தழீஇயவோங்கிய வுத்தா
வாங்கெனப் பெயரி தடைந்த கண்களை
விட்டிடாக் காட்சி விளங்குவ தின்சுவை
மட்டொலாம் பூம்பொழின் மன்னும் வளத்தது
தெங்கும் பலவுந் தீங்கனி மாவுங்
கொங்கியன் மகிழுங் குழுமிய வருக்கையு
நறுமண மாதவி நாறுஞ் சண்பக
நறைகமழ் வேலியு நண்ணிய தாங்கட்
டெண்ணீர் நிறைந்து திகழுந் தடங்க
ளொண்ணுரர் திலவுள வீர்ங்கட் டாமரை
பான லாம்பல் பல்வகை நறுமலர்க்

கானுலாந் தும்பி களித்திசை பாட
நீனிற மஞ்ஞை நேர்நட மாட
மாணிறக் குயிலின மன்னுந் துணையுடன்
கூடி நன்றெனக் குறித்திடு மிசையு
மூடியுங் கூடியு முவந்து புள்ளின
மார்க்கு மொலியு மணிமத கொலியுங்
கூர்த்த வரிவாள் கொண்டனர் மழவர்
நெற்றுள் குறைக்க நிமிர்தரூஉ மொலியும்
வற்றுப் புகழ்பெறு மறைவலோர் சுருதி
யோதுந் துவனியு மொருங்கு மயங்குங்
கோதி லின்னிசை குறைவறப் பெற்றது
தெங்கின் கனியைத் திருகிய மந்தியை
யங்கியல் காவல ரதட்டலு முருத்துக்
கடுவற் கூஉய்க் கன்றிய வதனொடு
படுதேன் பலவின் பருங்கனி பற்றி
யியன்று வலிகொடெறிந்தவர் தம்மேற்
பயின்ற மாவின் பழத்தையும் பறித்து
வீசத் தொடங்க விட்டனர் காவல்
கூறி யோடிக் குலைதருங் காட்சியும்
பைங்கிளி கூட்டுப் பார்ப்பினுக் காக
வங்குள வாழை யீந்தீங் கனியைக்
கொந்தி யன்பொடு கொணர்ந்தினி யூட்டு
மந்தக் காட்சியு மதிர்குர லருவி
யொலியினை மழையி னொலியென மயங்கி
மலிபெருந் தோகையை மகிழ்ந்து மயில்விரித்
தாடுங் காட்சியு மறையுங் கான்யா
றோடுங் காட்சியு மோது மறைநாப்
பார்ப்பன ரில்லின் பந்திக் காட்சியு
மார்த்தனர் வீர ரானையும் பரியுஞ்
சாரிகை செலுத்துஞ் சந்தக் காட்சியுங்

காரினை யடுத்த காவிற் புள்ளினம்
முலவுங் காட்சியு மோதருங் காட்சி
பலவும் பொருந்திப் பார்க்குநர் கண்ணைக்
கவருந் திறத்தது கதமென நீவிர்
நவலுமப் பதியை நோக்கிப் பயண
மாதிர் பின்னை யாகவெவ் ஞாதி
ரோதிவிவ் விளமை யொழிவது காணுதிர்
பச்சை யோங்கி பயில்வுறு மாயை
விச்சை யெனநிற விகாரங் கணத்தொறுங்
கொள்கை போலநுங் கூடெழி லாக்கை
யெள்ள வேறு யேந்தி விகாரம்
வலிமை குன்றும் வாழ்க்கை நிலையோ
மலிபெரு வலிமை வாடா முன்ன
மெழுதிர் பதிசூ ழிருங்குன் றத்தொடர்ப்
பழுதற மெழின்முன் பார்ப்பிர் பின்னர்ச்
சிறிது தூரஞ் சென்றனி ராயின்
பறிபூஞ் சோலை பார்ப்பிர் மற்றும்
பட்டினப் பதியைப் பாங்குடன் சூழ்ந்த
விடம்பெற மதிலு நீர்ம்புன லகழியுந்
தண்ணிய தாமரைத் தடமும் வேதியர்
நண்ணிய வீதியு நாற்கான் மண்டப
மதித்தார் வசந்த மாமண் டபமு
மதித்தார் பலநிலை யங்கோ புரமும்
மேதக விளங்க விரும்பி நோக்குவிர்
பாதகம் போக்கும் பாலாற் றத்துறை
சென்மி னரியெனச் செழும்புன லாடுதிர்
கன்ம நீங்குங் காசறு திருமண்
பன்னிரு நாமம் பரிவுட னூலிற்
பண்ணிய முறையிற் பாவி யணிந்து
திப்பியச் சுண்ணமுந் திருந்தத் தரித்துத்

தப்பிலா நித்தியஞ் சமைத்தற் குரியன
சாதிக் கேற்றன தாழ்வறு கருமமுங்
கோதிலா தனவெனக் கூறனுட் டானமு
முடித்துப் * பரிமள முகிழலர் துழாயோ
கடித்தா மலரோ கனியோ புனலோ
கையுறைபற்றிக் கடிதே யேகி
மையுறு மேக மன்னுகோ புரத்துட்
பணிவுட னுழைந்திருள் பாற்றும் பைம்பொ
னணிபெறுந் துவச மாருந் தம்பத்
திருமுன் வீழ்ந்து தெண்டனிட் டெழூஉ
வருநற் றொண்ட ரடிப்பொடி சித்தி
னணிந்து செல்வீ ரகங்குழை தொண்டைப்
பணிந்தங் கேத்திப் பழவினை விடுவீர்
மும்முறை வலமா முதியசீர்க் கோயிற்
செம்மணி குயிற்றிய சேயுயர் விமானம்
வருதிர் செல்வி வயங்கிழை யாக்கத்
தொருபெருந் தேவி யோங்கிய நிமலன்
பெருவரை மார்பிற் பீடுற விளக்குத்
திருவின் சேவடி சேர்ந்தநற் குருவி
னருளை முன்னி யடைந்தவள் வாயிலா
மருளை விட்ட மனத்தொடு சீரிய
செம்பொன் விமானத் திருமுன் றெண்டனிட்
டும்பர் கோனு முமையின் கொழுநனு
மறையின் கிழவனு மற்றுள தேவரு
முறையிற் பணியு முதல்வற் குறுகின்

---

* பத்ரம் புஷ்பம் பலந் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, தத³ஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந.''—ஸ்ரீ பகவத்கீதை-௯-ஆம் அத்யாயம்-௨௬.

மெய்ம்மறந் தின்ப விரிகடன் மூழ்குவிர்
மெய்ம்முழுப் பத்தி மேதகப் பூசை
புரியுந ரிடத்துப் புரிந்தகை யுறைதரீர்
கரிய மேனிக் கமலக் கண்ணனை
தவிருஞ் சேயொளி யார்ந்து பரிதலைத்
தவிரும் பகலோர் தழீஇத்திரண் டன்ன
தேசு முடியுந் திகழுஞ் சத்துவத்
தேசு நடம்பிடுந் திருமுக வட்டமு
மங்குறாத் கருணை யந்தேன் பெருகிப்
பொங்குசெந் தாமரைப் பூந்தடங் கண்களும்
புன்னகை பொலியும் போதுறழ் வாயு
முன்னரும் பெருமை[illegible] வல்லி
புணர்ந்த மணிதிகழ் பொன்வரை மார்பும்
வணங்கு மடியவர் வருந்தப் பற்பல
விடுக்கண் புரியு மேதிலர் திறலை
மிடுக்கி னீர்க்கு மொளிரைம் படையு
மஞ்ச லென்று மழகிய கையுந்
தஞ்சஞ் சரணெனச் சாற்றுங் கையும்
பொற்பட் டாடை பொலிதிரு வரையுங்
கற்பகத் தி[illegible] கருவிளை கழலுஞ்
சீர்த்திரு வடியுஞ் செழுநீர் முகிலென
நீர்த்தன மலரொ[illegible] பூத்திலங்
விளங்குந் தோற்றமும் விமலனை யேத்தும்
வளங்குலா மணிமுடி மன்னிய வாகுங்
கண்ட போதே கழிபே ருவகை
கொண்டின் புறுவிர் கோமள மேனியை
நோக்கிக் கண்க ளாரு மிரங்க
ளாக்கிக் கொள்ளினு மமையா வென்பிர்
படைத்த கண்கள் பயன்பெற் றனவெனப்
புடைத்துத் தேகம் புளகங் கொள்விர்

நீல மேனி, நெடியோ னென்றும்
பால மார்கட் பரமனும் பிரமனுந்
தேடிக் காணத் தேவனே யென்று
மோடிப் பொய்கைவா யோலிடு கைம்மலை
முன்ன ரெய்தி முதலையைக் கொன்று
தன்னு மருளா றயக்கொழித் துதவிய
மூலமே யென்று மூற்றிய பத்திப்
பாலனுக் காகப் பரிந்து தூணிடையே
தோன்றித் தீய தொல்லசு ரன்ற
னூன்றிகழ் மார்வ முடைதர வகிர்ந்த
திண்டிறற் சீயத் தெய்வமே யென்றும்
மண்டிணி ஞாலமும் வானமுங் கலங்கத்
துன்பந் தந்த துப்புடை யிராவணன்
றன்பெருங் கிளையொடு சமரின் மாளக்
கொன்றகோ தண்டக் கொற்றவ வென்று
மன்றனைக் கலமா மவன்பின் னவனை
யருளொடு நோக்கி யஞ்சலென் றேற்று
மருளினை யொழித்து மன்னிய சிறப்பைத்
தந்த தயாதன் றனயனே யென்றும்
மூந்தும் பத்தியு மூதறி வும்பெற
அருவினை மேன்மை தன்னிய பதத்து
மருவிய வைத்த மாயவ வென்று
மந்தன் புதல்வ னசைக்களத் திழுத்து
வெந்து கலங்க மாண்பில் செய்கையை
வடுப்பெறப் புரிய மயங்கிப் பரிபவ
மடுத்திடப் பொறுஅ தைவ ரில்லான்
முறையிடக் காத்த முதல்வனே யென்றும்
மறைமுதற் பிரணவ மந்திரத் துட்பொரு
ளாகும் பரமனே யடியவ ருருவினை
யேகும் படியொன் றேதுவில் கருணை

தேக்குங் குணத்துச் சீரியோ யென்றுங்
காக்கும் பெருமை கழுறு மூபாயமு
மூபேயமு மாகு மொருவனே யென்று
மபேதவா தியரு மறைந்த பேதம்
வாதிப் பலரும் வணக்குஞ் சேவடிச்
சோதிப் புண்ணிய நாயக னென்றுந்
தாயினைப் போலுந் தகவோ யென்றும்
வாயினைப் படைத்த வண்பய னெய்தி
மற்றும் பலவா மகிழ்ந்தினி தேத்திக்
குற்றம் பலவுங் கூடுங் கொள்கல
னாயே னனுகினே னயந்துன் றிருவடி
பேயேன் காமப் பெருங்கடல் வீழ்ந்து
* "வாடினேன் வாடி வருந்தினே னின்னைக்
கூடினேன்" மற்றக் குறிக்கத் தகுவதோர்
குணமொன் றுமிலேன் குறுகுதற் கஞ்சுவேன்
கணமு நல்வினை காண்கிலே னீசனேன்
பொறையிலேன் சலிக்கும் புந்தியேன் மானத்
துறையிலே யிறங்கேன் றன்றிய வஞ்சக்
கன்மனத் தீயேன் காமனுக் கட்படுந்
துன்மனச் சிறியேன் றுயர்தரு வல்வினை

---

* "வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தாற்
பெருந்துய ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தருங் கலவியே கருதி
யோடினே னோடி யுய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினே னாடி நான்கண்டு கொண்டே
னாராயணாவென்னு நாமம்."—
பெரியதிருமொழி-முதற்பத்து-க.

யாக்கினை னருளாற் கமைவிலே னம்ம
போக்கினேன் பகலைப் பொருளறக் காலன்
பாசப் படைகொடு பற்றிச் சினந்து
பேசிக் கதழெரிப் பெருநிர யத்துத்
தள்ளுவ னென்றே தவிப்பன் றையயாக்
தெள்ளிய தண்ணீர்ச் செழுங்கடல் போலு
நின்னை யன்றி நீசனேற் கருளத்
துன்னு மொருவனைத் தூயோய் காண்கிலே
னென்று கண்ணணி லெழூஉ யருவியோ
டொன்றும் பத்தி யொளிர நீ ரொருகாற்
பணியி னமையும் பன்முறை வீழ்ந்து
பணியவும் வேண்டுமோ பரிந்துமற் றவன்றான்
பொங்கிய கருணை பொழிந்து கடைக்கணித்
தங்கினி துங்கட் கானந் தந்தரு
மொப்பிலாப் பதத்தை யுவந்தளித் தனமெனத்
தப்பிலா வாய்மை தகவுற வுரைக்கக்
கண்டனி ராவிர் காண்டொறுங் காண்டொறு
மண்டிய வுவகையான் மயிர்ச்சிலிர்ப் புறவி
ரன்றே வினைக ளறந்தன வென்று
குன்று மகிழ்ச்சி கொள்விர் மாதோ
நாயினை தென்று நவிலுஞ் செருக்குப்
போன தென்ன புதுமையோ வென்பி
ரொன்றுந் தெய்வ மோங்கிய மாலே
பொன்ற விருவினை பொன்றுமற் றவன்றன்
சேவடி தொழுவெனத் தெள்ளிதிற் றெரிகுவிர்
மூவகைத் தத்துவ முறைபெறு ஞானம்
பொருந்துவிர் நால்வகைப் புருடார்த் தங்களுந்
தருந்திரு மாலெனத் தக்கபே றறிவு
தலைப்படப் பெறுவிர் தாக்குமைம் பொறிக
ளலைக்குமக் குறும்பி னகலுவி ரம்ம

வறுபெருங் குற்றமு மறுமே யெழுவகை
யுறுபிற வித்தொடக் கொழியு மறுசுவை
யுண்டியும் வேண்டீ ருலகினர் தோன்றான்
கொண்டவைக் கிலையுங் குறித்துக் களிப்பீர்
நானில மேனில நண்ணும் பாதலங்
கோனவன் மற்றுங் குறிக்குமெவ் விடத்து
மெல்லாப் பொருளினு மெள்ளுறை நெய்போற்
புல்லா விருத்தல் புதுமையிற் காண்பீர்
குணமூன் றிற்றான் கோதற சத்துவ
குணமே பூண்ட கொள்கையை வியப்பீ
ரிருமுது குரவரு மெழின்மனை வியரும்
பெருநலத் தனயரும் பெருகிய குணத்துத்
தோழருந் திருவுந் தாயமா லென்பீ
ராழிய மறைமுத லாருமோ ரெழுத்து
மந்திரத் துட்பொருண் மாதவ னென்னு
முந்து முணர்வு முற்றப் பெறுகுவி
ரிவ்வகை யாக வீரிய வருளைச்
செவ்வையிற் செலுத்தித் தேக்கிய தெனத்தருந்
தூய தீர்த்தந் தோமற வேற்றுக்
காயமு மந்தக் கரணமும் வாக்கு
முயிருந் திருந்த வுவந்துடன் பருகிப்
பயிலு நறுமணப் பச்சைத் துழாயை
யருளப் பெற்றனி ரகமகிழ் வீரே
மருளறு மாண்பமை வான்சட கோபம்
பணிந்தங் கேத்திப் பயன்பெற் றேனெனப்
பணித்துமற் றதனைப் பரிவோ டேற்று
நீல மேனி நிமலனைத் தோற்ற
மேலுங் கருத்து மிருகணுங் களிக்கப்
பிறவிப் பயனீர் பெறவிரும் பினனே
வறிதே பல்பகல் வாடிப் போக்கிய

யானுமக் கெய்தி யின்னாக் கன்பூ
மானும் சேவடி வணங்கின னின்னே
யுய்ந்தனன் றிருகா டொப்பிலாச் சிறப்பின
னைதக்கலித் திட்ட வயிர்தரு முத்தரு
மாதி யரவு மரயப் புன்றுஞ்
சோதிப் பிரம்மைச் சுழற்றித் திரிலா
விலக்குஞ் சேனை வீற்றுக் கோனுமா
சலத் தப் புத்தியை காட்டிய சித்தரு
மற்று முன்ன மாண்பமைச் சித்தரு
முற்று மின்ப முழுகப் பரமனை
நோக்கிப் போற்று நவலருந் திறத்தது
தீக்குணை மிலதொலி சிறந்தமற் றதனை
யெண்ணிலாக் கதிரவ ரொழிலு மிகர்ப்பவோ
*தன்னளிறு முகாந்த மாசழி லாதது
சுருக்கமும்பெருக்கமுந் தூய்மையிலாப்பொருள்
வருக்கமு மங்கிலே மனமும் வாக்குஞ்
செல்லா நிலைத்துத் திருந்திய வைணவர்க்
கெல்லா முறைவிட மிருஞ்சடை யீசனும்
போதனு மற்றைப் பொருந்திய தேவருந்
தீதிலாச் சிந்தைச் செழுந்தவ முனிவரு
மப்பர நாடி யறுதின மாலின்
றுப்புற முடியிணை தொழுவார் காண்டி
னறம்பல புரிதலு மகற்றியச் சுதனை
திறம்பொலி முகிலி னீலமே னியனைப்
பயனோ டாது பற்றித் திருவடி

---

* "சிறுகாலையிலா நிலையா திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
வுறுகால் கிளர்பூதமெலா முகினும்
மறுகா நெறியெய் துவன் வாளுடையாய்." —கம்ப
ராமாயணம்-ஆரணியகாண்டம்-சரபங்கர் பிற
ப்பு நீக்குபடலம்-௨௦.

நயந்து நூலி னவிலுஞ் சரணே
கதியெனு மறத்தைக் கதுமெனப் புரியின்
மதியினைக் கலக்கும் வல்வினை நீங்கிச்
செப்பிய கலங்காத் திருநக ரடைகுவர்
திப்பிய வின்பந் திளைப்ப ரவனெனக்
கோதிலா ஞானக் குரவர் விளம்புப
பேதியா வலைக்கடல் பேதித் திடினுஞ்
சந்திர சூரியர் தாந்திசை மயங்கினு
முந்தை நான்மறை முழுமையும் பொய்ப்பினும்
பெரியோர் வாயுரை பிழைத்திடா திதுமெய்
அரிய பயனுரை யழகினு மினிதென்
றமிழ்நிர் மறையி னந்தத் தந்தணர்
றறியும் பொருளுநா னுறைந்ததே தேவர்
பலரோ யவரைப் பரமெனு நாலும்
பலவே யவற்றைப் பார்ப்பினெவ் வொன்றும்
முரண்படக் காண்பிர் முடியக் காண
விரம்பிய வாணா ளைவீர் பெற்றிலீர்
வாணாள் பெற்று வருந்துத் தேரினு
மாறுப் பொருளெனை மதிகொண் டுணர்வீ
ருலக வாழ்வா முலவா வெந்தீ
யுலவும் பாலையி லுழன்று வருந்தி
யுள்ளு முடலு முருகிச் சோர்ந்து
வின்ருங் கொல்லிய விதியென் மாழ்கு
மெளியீர் நும்மீ திரங்கி
யரிதீ ரிசைத்தன னரும்பொரு டானென.

---

மன்பதையாற்றுப்படை முற்றிற்று.

பராபவ வருடப் பங்குனி மதியில்
விராவுமீ ரெட்டாம் விளங்குந் தினத்திற்
பள்ளி கொண்டைப் பரமன் மீத
யுள்ளுறு மன்போ டோராற் றுப்படை
௫. செப்பினன் மாறன் சேவடி நுன்னித்
தப்பிலாச் சொற்பொரு டழைப்பப் புரிசைச்
செழும்பதிக் கடாம்பிச் சீநிவா சன்றன்
றொழும்பன் திருமால் சுடரடி யிணைக்கே.

---